# உலக திருமண நாள்

பிரசங்க குறிப்பு

வேதாகம பகுதி:
பழைய ஏற்பாடு: மல்கியா 2:11-16 ; சங்கீதம் 127 & 128
நிரூப பகுதி: எபேசியர் 5: 22-33; நற்செய்தி பகுதி: மத்தேயு 19: 3-9

**முன்னுரை**

உலக திருமண நாளை நாம் சபையுடன் இணைந்து கடந்த 12 வருடங்களாக கொண்டாடிவருகிறோம். ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் திருமணத்தைக் குறித்து தியானிக்கிறோம். உடன்படிக்கை திருமணத்தின் ஆசீர்வாதங்கள், திருமணத்தில் தேவனுடைய ராஜ்யம், திருமணம் கனத்துக்குரியது, திருமணத்தில் தேவனுடைய மகிமை, திருமணத்தில் எழுப்புதல்போன்ற தலைப்புகளில் கடந்த வருடங்களில் தியானித்தோம். இவ்வருடம் தெரிந்து கொள்ளப்பட்ட தலைப்பு **'பரிபூரண திருமண வாழ்வு'** என்பதாகும் (யோவான் 10:10).

**பரிபூரண திருமண வாழ்வு** என்பது, ஏதோ ஒரு வாழ்க்கை வாழ்வது அல்ல; முழுமையான ஒரு வாழ்க்கை வாழ்வது ஆகும். அது மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை. "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது " என்று கூறி அறிவிக்கும் வாழ்க்கை!
கர்த்தருடைய வழிகளில் நடப்பதும், பரிசுத்தத்தைப் பின்பற்றுவதும், கிறிஸ்துவைப் போல மாற வேண்டும் என்ற வாஞ்சையுமே நிறைவான வாழ்வுக்கு நேராக வழிநடத்தும். பரிசுத்த ஆவியானவர் நம்மை மறுரூபப் படுத்தினால் மட்டுமே இப்படிப்பட்ட வாழ்க்கை சாத்தியமாகும். தேவனுடைய ஜீவநதி நமக்குள்ளும், நமது திருமணத்தின் வாயிலாகவும் பாய்ந்தோடும் போது, நாம் வசனத்தால் சுத்திகரிக்கப்படுவதும், கனி கொடுக்கும்படி உரமாக்கப்படுவதும், வல்லமையாக விளங்க பலப்படுத்தப்படுவதும் செயல்படும்.

பரிபூரண திருமண வாழ்வில் கீழ்க்காணும் **மூன்று** குணாதிசயங்கள் காணப்படும்.

**1. சுத்திகரிக்கப்பட்ட திருமணம்**

**தேவனுடைய சித்தமும் கட்டளையும்:** “நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து...”
1 தெசலோனிக்கேயர் 4:3-5

- வேதாகமத்தில், சுத்திகரிக்கப்படுவது என்பது, ஒரு நபரையோ அல்லது ஒரு பொருளையோ தேவனுடைய சிறப்பான நோக்கத்திற்காக பரிசுத்தப்படுத்தி, பிரித்தெடுத்து வைப்பதைக் குறிக்கும்.

- ஒரு கிறிஸ்தவனுக்கு, சுத்திகரிப்பு என்பது, பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவைப் போல மாற்றம் பெற வாழ்நாள் முழுவதும் நடைபெறும் ஒரு வழிமுறையாகும்.

- சுத்திகரிக்கப்பட்ட திருமணம் என்பது தம்பதியர் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் சகல பாவத்திலிருந்தும் கழுவப்பட்டு பரிசுத்தமான வாழ்க்கை வாழ தங்களை அர்ப்பணிப்பது ஆகும்.

- தேவனுடைய வார்த்தையாலும், சிந்தப்பட்ட இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தாலும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் வாயிலாக மட்டுமே அடையமுடியும்.

- சுத்திகரிக்கப்பட்ட, பரிசுத்த திருமணத்தின் வாயிலாக, இயேசு கிறிஸ்து நம் வாழ்க்கையில் ராஜாவாக அரசாண்டு, திருமணத்தின் எல்லா பகுதிகளிலும் எதிராளியின் சதித்திட்டங்களை முறியடிக்க அதிகாரம் அளிப்பார்.

- சுத்திகரிக்கப்பட்ட திருமணம் இயேசு கிறிஸ்துவின் ஒளியை பிரதிபலித்து, இந்த உலகத்திற்கு அவரின் அன்பைக் காண்பிக்கும் ஒரு விளக்காக மாறிவிடும்.

- திருச்சபையை சுத்திகரிக்க தமது இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து, தமது பரிசுத்த மணவாட்டிக்காக திரும்ப வரப்போகிறார். நாமே அவருடைய மணவாட்டி. நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நம்மையும், நம் திருமணத்தையும், நம் பிள்ளைகளையும், நம் திருச்சபையையும், நம் சமுதாயத்தையும் ஆயத்தம் செய்வோம்.

**2. கனி கொடுக்கும் திருமணம்**

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது..." யோவான் 15:5

- கனி கொடுக்கும் திருமணம் என்பது தேவனுடைய மகிமைக்காக கனி கொடுக்கும் எண்ணத்துடன், கணவன் மனைவி இருவரும் விதைகளை விதைப்பதாகும்.

- ஒரே நோக்குடன், ஒரே இலக்குடன், ஆவிக்குரிய கவனத்துடன் செயல்பட வேண்டும். தம்பதியராக விசுவாசத்துடனும், கீழ்ப்படிதலுடனும் இயேசு கிறிஸ்துவில் 'சார்ந்திருத்தல்' அல்லது 'நிலைத்திருத்தல்' என்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

- இயேசு தன்னைப் பற்றிகூறும் போது "நான் மெய்யான திராட்சைச்செடி" (வாழ்வின் ஆதாரம், ஊட்டம் மற்றும் வல்லமை) என்றும் விசுவாசிகள் யாவரும் "கொடிகள்" என்றும் கூறுகிறார். நாம் அவரில் இணைந்து இருக்கும் போது கனி கொடுப்பது இயல்பானது; கனியற்ற வாழ்க்கைக்கு அங்கே இடமில்லை!

- வேலை மற்றும் பொறுப்புகளின் மத்தியில், ஜெப வாழ்வுக்குத் தம்பதியர் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்; அதற்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது அதிக பலனளிக்கும்.

- ஒவ்வொரு திருமணமும் கனி கொடுக்கவேண்டும் என்பதே தேவனுடைய அழைப்பு. தேவன் நமக்கென்று வைத்திருக்கும் அனைத்து திட்டத்தையும் நாம் நிறைவேற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

- **பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்:**
    - நம்முடைய அழைப்பு இன்னதென்று அறிந்திருக்கிறோமா?
    - நம்முடைய திருமணத்தின் நோக்கம் இன்னதென்று தெரிந்திருக்கிறோமா?

- தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நமக்கு நமது நோக்கத்தையும், அழைப்பையும் அறியும்படி வழிநடத்தட்டும். அசையாமல் கர்த்தரில் நம்பிக்கை வைத்து, அர்ப்பணிப்பினால் ஒன்றாக விளங்க அவரே உதவி செய்யட்டும்.

**3. வல்லமையான திருமணம்**

"நானோ, கர்த்தருடையஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்." மீகா 3:8

- தம்பதியர் கிறிஸ்துவுக்குள் இருந்து, அவரையே சார்ந்திருக்கும்போது தேவனுடைய வல்லமை அவர்கள் வாயிலாக வெளிப்படுவது தம்பதியரின் உரிமையாகும்.

- தேவனுடைய ஜீவநதி நம்மிலும், நம் திருமணத்திலும் பாய்ந்தோடும்போது சுத்திகரிக்கப்படுதலும், கனிகொடுத்தலும் மற்றும் தேவனுடைய வல்லமை நம்வாயிலாக வெளிப்படுவதும் நிரூபிக்கப்படும்.

- தம்பதியர் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் மாறுவார்கள். அவர்களுடைய இல்லங்கள் தடைகள் நீங்கி, வெற்றி உண்டாக்கும் சாட்சியின் இடங்களாக மாறும்.

- கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்காக வைத்துள்ள மெய்யான வெற்றி மற்றும் ஆளுகையின் வழியில் தம்பதியர் நடக்கத் தொடங்குவார்கள்.

- தம்பதியர் வாயிலாக பாயும் தேவ வல்லமை, தோல்வியை வெற்றியாக மாற்றவும்; அந்தகாரத்தின் சக்திகளை கீழ்ப்படுத்தவும்; இருள் சூழ்ந்த இந்த உலகில் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தவும் உதவும்.

**ஜெபம்**

எங்கள் திருமண வாழ்க்கையும், இல்லங்களும் பரிசுத்தமாக்கப் படுவதாக. இயேசுவே, நீரே மெய்யான திராட்சச்செடி, நாங்கள் அதன் கிளைகள் என்பதை நாங்கள் அறிக்கை செய்கிறோம்; நாங்கள் உம்மில் நிலைத்திருந்து மிகுந்த கனி கொடுக்க எங்களுக்கு உதவி செய்யும். பரிசுத்த ஆவியானவரே, எங்கள் திருமண வாழ்வு கிறிஸ்துவைப் பிரதிபலிக்கவும், அவருக்கு மகிமை உண்டாகவும், உம்முடைய வல்லமையால் எங்களை நிரப்பும். இயேசு கிருஸ்துவின் வாயிலாக பெற்றுகொள்ளும் பரிபூரண திருமணவாழ்வு இன்றும் என்றும் எங்களுக்கு சொந்தமாவதாக. ஆமென்.